1314
1314

உ

ஓம் பரப்பிர்மணேய நம:

ஸ்ரீ ரங்கநாதர்

பக்திரஸப் பாமாலை.

இயற்றியவர்:

வெ. முத்துராம ரெட்டியார்,

விளாங்குட்டையூர்.

வெளியிடுபவர்:

மு. ஸ்ரீரங்கசாமி ரெட்டியார்,

விளாங்குட்டையூர், ஓலகடம் போஸ்டு.

விலை] 1934. [0-1-0.

Q22:417
N34
121647

NANDA PRESS, ERODE.

தவுட்டுப்பாளையம்

மகா-௱-ஸ்ரீ கர்ஜனக்கவிராயர் அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

சீர் சிறந்த ரங்கர் மிசைச் செந்தமிழால் சிந்திதனைப்
பாரெங்கும் கொண்டாடப் பாடினேன் யாரென்றால்
இச்செகத்தி லற்புதக் கவிட்டமிழ் தராதரத்தை
மெச்சு முத்து ராமரெட்டி வேள்,

கெம்மியப்பட்டி மகா-௱-ஸ்ரீ கந்தசாமி பிள்ளை

அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

இரவி சசி யுலவு புவி யதிற் கீர்த்திபெற்றிலங் கின்னமேவும்
பரவியதோர் புகழ்படைத்த வெங்கட்ட ரெட்டியருள் பாலனை
சுருதி முறை சிறிதறியும் முத்துராமத்துரையு மூவந்து நேர்ந்து
அரவணையிற் றுயில் வளரும் கடவுளின்மேல்
சிந்தெனும் பண் அருளினனே.

காங்கயம் சிட்டா அஷ்டாவதானம் மகா-௱-ஸ்ரீ

சேஷாசல நாயுடு அவர்கள் பாடிய

புகழுரை.

சுந்தரஞ் சேர் வடகரையின்னாட்டி லோங்கிச்
சுகம்பரவும் வராகபுரி வடகீழ்த் திக்கில்
கந்தமிகும் விளாங்குட்டை தன்னிலோங்கிக்
கதித்துவளர் சீரல சிம்மாச னேந்த்ரன்
இந்திரனேர் வெங்கட்டராம மன்னன்
ஈன்றமுத்து ராமதுரை எழில் சேர்பொன்னி
வந்து வளையரங்கத்தி னண்ணல்மீது
வழுத்ததமிழ் பாக்கள்மிகு மதுரந்தானே.

புத்தகாசிரியர்,

வே. முத்துராம ரெட்டியார்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மதிப்புரை.

பூவுலகின் கண் சேதனகோடிகள் உஜ்ஜீவிக்கவேண்டி, நம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட உபாயங்கள் நான்காகும். அவைகளாவன கர்ம, ஞான, பக்தி, ப்ரபத்தி, எனப்படும். இந்நான்கினுள் தலைசிறந்ததும் சுலபமானதுமான சரமோபாய மென்று சொல்லப்படுகிற, ப்ரபத்தி நிஷ்டைக்கு அடிகோலியான பக்தியோகம் என்பது யாவராலும் ஒப்புக்கொண்டதாகும்.

இத்தகைய பக்தியானது கை கூடினாலல்லது ப்ரபத்தி என்பது உண்டாகாதென்பதும், இத்தகைய ப்ரபத்தி கை கூடி னாலல்லது மோக்ஷம் சித்தியாகாதென்பதும் நமது பெரியோர் களின் கொள்கைகளாகும்.

ஆகையால் சேதனர்களின் உஜ்ஜீவனத்திற்கு பக்தியானது இன்றியமையாத சாதனமாகும். அவ்வித பக்தி மக்களுக்குள் ஜனித்து மேம்பாடடைந்து உய்யவேண்டுமாயின், அவைகளுக்கு சாதகமான நூல்களின் உதவிவேண்டுவது அவசியம். இத்தகைய நூல்கள் பல பலவாக, பரோபகார சிந்தையுள்ள அநேக பெரி யோர்களால் உபகரிக்கப்பட்டிருந்தும் அவை மிகவும் பாண்டித்ய முடையவர்களுக்கே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன.

எனினும் மந்தமதிகளாகிய பாமரர்களுக்கு ஏற்றவாறு எளிய நடையில் பக்தியைப் பெருக்கத்தக்க நூல்கள் தேவையிருக்கிறன வென்பதற்கிசைய விளாங்குட்டையூர், திருவாளர். வெ. முத்துராம ரெட்டியார் தமது பரம கிருபையால் "ஸ்ரீரங்கநாதர் பக்திரஸப்பா மாலை எனும் நூலை மக்களின் உஜ்ஜீவனத்தையுன்னி உபகரித்து உதவினமைக்கு நான் மனப்பூர்வமாகப்பாராட்டுகிறேன்.

ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கன்,

16—7—27. ஈரோடு.

முகவுரை.

சகோதர சகோதரிகளே!

நமது நாட்டுக் கவி வல்லவர்களும், அவர்களை ஆதரித்து வந்த ஹிந்து அரசர்களால் கட்டப்பட்ட வானளாவிய கோபுரங்கள், பொய்கைகள், அன்னச்சத்திரங்கள் முதலான பொது ஸ்தாபனங்களும் நமது ஹிந்துமதம் புராதன காலந்தொட்டு சிறப்புடன் இருப்பதற்கு உதவியாக இருந்திருக்கின்றன. ஆயினும் தற்போது ஹிந்து கோவில் உத்ஸவாதிகள் நடக்குமிடங்களெல்லாம் பஞ்சமஹா பாதகங்கள் நடக்கும் இடங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. ஆகவே அப்பாதகங்கள் நடைபெறாமற்செய்ய முடியும் காலம் வரும்வரையில் உத்ஸவாதிகள் நடக்காமல் நிறுத்தி விடுவதே நாட்டுக்கு நன்மையளிக்குமெனத் தோன்றுகிறது.

ஊருக்கொரு அரசமரம் பிள்ளையார் கோவில் உண்டு. அங்கேயே பொங்கலிட்டு சுவாமியை பஜனை கோஷ்டிகளுடன் வந்தனை வழிபாடுகள் செய்வதே சிறந்த முறை.

அப்படிப்பட்ட பஜனைகளுக்கு உபயோகமாகும்படி எனது தகப்பனர் ஸ்ரீமான் முத்துராம ரெட்டியாரவர்கள் பாடிய இப்பாடல்களை அவர் உத்தரவிட்டதற்காக நான் அச்சிட்டு வெளியிட முன் வந்துள்ளேன்.

இப்பாடலில் சில மூடநம்பிக்கைகளுக்கு உதவியளிக்குமென சிலர் சொல்வதும் உண்டு ஆயினும் பக்திப்பரவசத்துடன் பாடிய எனது தகப்பனரின் கட்டளைக்கடங்கி நடக்கக் கடமைப்பட்டுள்ளேன். பக்தர்கள் இதிலுள்ள குற்றங்குறைகளை பொருட்படுத்தாது பக்தி ரஸத்துடன் பாடி ஆனந்திக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மு. ஸ்ரீரங்கசாமி ரெட்டி,
விளாங்குட்டையூர்,
ஒலகடம் P. O. பவானிதாலுகா.

உ

ஓம் நமோ பகவதே வாசுதேவாய நம:

ஸ்ரீரங்கநாதர்

பக்திரஸப் பாமாலை.

வெண்பா.

சீர் சிறந்த ரங்கர் மிசைச் செந்தமிழால் சிந்திதனைப்
பார்சிறந்து என்னாளும் பாடுதற்கு—ஏர்சிறந்த
தம்பிக்காயன்று வனத்தந்தி வடிவாகி வந்த
தும்பிக்கை யாழ்வார் துணை.

சிந்து.

(1) திருவரங்கேசா—நறுமலர் வாசா
தீனதயாளா—ஜானகி மணாளா
தீவினை தீரும்—மேவியேபாரும்
திக்குதவி தாருமையா—ரங்கநாதா
பக்குதவி வாருமையா

(2) ரங்கமதில்வாசா—எங்கும் பிரகாசா
நரசிம்மரூபா—வரம் தரும் தீபா
நளின பொற் கண்ணா—மலைமுகில் வண்ணா
நம்பினேனுந்தனையே—ரங்கநாதா
வந்துகாரெந்தனையே

(3) பண்டுமயிலாடக்—கண்டு கோழியாடும்
பாவனைபோல நானே—கேவலன் சொன்னேனே
பாருமிந்த நூலேநின்—பேருரைத்ததாலே
பாவலர் கைக்கொள் வாரையா—ரங்கநாதா
யாவர்களுந்தள்ளாரையா

(4) பாலர்விளையாட்டைப்—போலேயவர் பாட்டைப்
பாடுவதுபோலே—நான் பாடினே னுன் மேலே
பச்சைமுகில் வண்ணா—இச்சையுடன் சொன்ன
பாலகனைக்காருமையா—ரங்கநாதா
மேலே வரந்தாருமையா

(5) தில்லை நடராஜர்—தொல்லைவினைபேஜாய்
தீர்த்தரங்கேசா—மூர்த்தியே சேஷா
சிறந்தணையோனே—அறிந்திடநானே
செப்பினேன் சிந்திதனை—ரங்கநாதா
ஒப்புக்கொள்வந்திதனை

(6) பங்கஜநாபா—எங்கும்பிரதாபா
பார்வதியண்ணா—கார்முகில்வண்ணா
பஞ்சவர் கடுதா—கஞ்சமலர்ப்பாதா
பாவவினை தீருமையா—ரங்கநாதா
மேவியெனைக் காருமையா

(7) ராவணசம்மாரா—தேவர்களுத்தாரா
ரங்கஸ்தலத்தோனே—எங்கள் பெருமானே
நானுனையே நம்பி—னேனே உன தன்பில்
நற்றுழாயலங்காரனே—ரங்கநாதா
கற்றோர்கள் சிங்காரனே

(8) சங்கு சக்ரேசா—மங்கை புகழ்நேசா
தார்மருவுந்தோளாய்—கார்மருவுந்தாளாய்
சதுர்மறை மேலா—அதில்வளர்சீலா
தாமோதரானந்தனே—ரங்கநாதா
காமாதிறமைந்தனே

(9) தேவர்கள் கல்மாரி—தூவயிந்தப்பாரில்
திண்மலையைத்தாங்க—வீண்முழுதுமோங்க
சித்துவிரலாலே—யெடுத்து குடைபோலே
திறமாய் பிடித்தவனே—ரங்கநாதா
அரவில் நடித்தவனே

(10) கஞ்சமலர்வதனு—மிஞ்சும்சுதரிசனு
கரத்தில் பிடித்தரவ—சிரத்தில் நடித்தவனே
கற்றேருளத்திலிரு—பத்ராசலத்தில்வளர்
களபகஸ்தூரியனே—ரங்கநாதா
துளபமணிமார்பனே

(11) அண்டபுவனங்க—ளுண்டுமிழும் ரங்கா
அனந்த சயன—மனந்தபுயனு
அச்சுதா வைகுந்தா—பக்ஷம்வைத்து கந்த
அனங்கனைப்பெற்றவனே—ரங்கநாதா
என்-மனந்தனிலுற்றவனே

(12) பஞ்சவர்சகாயா—கஞ்சமலர்வாயா
பத்தவதார—மெடுத்த கெம்பீரா
பாரளந்தோனே நின்—தாள்பணிந்தேனே
பஞ்சாயுதக்கையனே—ரங்கநாதா
அஞ்சலெனக்காரையனே.

(13) அடியார்க்கடியாய்—படியிற்படியா
தாதலினுலே—சூதைமென்மேலே
அகந்தனில் கொண்டேன்—சுகந்தனைவிண்டேன்
ஆதரித்தாளுமையா—ரங்கநாதா
ஓதுமுறைகேளையா

(14) ஆயிரநாமா—சாய்விலாச்சோமா
அருமறைநாதா—திருவருடாதா
ஐம்படையோனே—முன்படைந்தேனே
ஆண்டருள்தாருமையா—ரங்கநாதா
வேண்டினேன் காருமையா

(15) உந்தனிருதாளை-த்-தந்திடுமிவ்வேளை
எந்தனைக்காராய்—சுகந்தசரீரா
உச்சிதப்ரக்யாதா—லக்ஷ்மிசமேதா
ஓடியென்முன்பாகவா—ரங்கநாதா
பாடினேனன்பாகவே

(16) சீதாசமேதா—லீலாவினோதா
திருமகள் நேசா—வாருஞ்ஜெகதீசா
சின்மயரூபா—நன்மலர்நாபா
ஸ்ரீதரகோவிந்தனே—ரங்கநாதா
தீருமென்பாவந்தனே

(17) காமனையீன்ற—மாமனைக்கொன்ற
சீலனேவாரும்—பாலனைப்பாரும்
கார்முகில் வண்ணா—சீர்வளர் கண்ணா
கங்கை வருதாளனே—ரங்கநாதா
பங்கமிலாதாளனே

(18) தினமு முன்னுமம்—மனதிலெண்ணமல்
தியங்கினேன் சித்தம்—மயங்கினேன் நித்தம்
சிறியேனைப்பாரும்—வறுமையைத்தீரும்
சிந்தித்து வாடுறேனே—ரங்கநாதா
வந்தித்துத்தேடுறேனே

(19) பானுவைக்கண்ட—தானதகண்ட
பனியெனப்பாவம்—தனக்கோயின் சாபம்
பருத்ததிண்டோளா—உரைத்ததுகேளாய்
பண்ணுமறைப்பொருளே—ரங்கநாதா
இன்னமெனக்கருளே

(20) தாயும் நீ தந்தை—நீ யெனச்சிந்தை
தன்னில் நினைந்தேன்—எண்ணித்துணிந்தேன்
தசரதராமா—ஒசர்வபூமா
சங்கடந்தீருமையா—ரங்கநாதா
என்கிட்ட வாருமையா

(21) மந்திர தாரா—தந்திரவீரா
மாமனோகாரா—வாமாவதாரா
வந்தெனையாளும்—சிந்தனை தீரும்
வானோர்பணிபாதனே—ரங்கநாதா
ஞானந்தரும் போதனே

(22) ஓ ரகுவீரா—தீர கம்பீரா
ஓ சர்வ பூமா—தேவுளநாமா
உந்தனையல்லால்—வந்தனை சொல்லேன்
உத்தமராமையனே—ரங்கநாதா
நின் சித்த மிரங்கையனே

(23) அரவணையோனே—நின்—கழல் பணிந்தேனே
அம்புயக்கண்ணா—தண்புயல் வண்ணா
அருமறைநாதா—வரமருள் நீதா
அச்சுதா கோவிந்தனே—ரங்கநாதா
பக்ஷம் வைத்துக்கா வெந்தனை

(24) பலபத்ர ராமா—சிலைவளைத்த பூமா
பாருலகளந்த—காருமென் றுவந்த
பக்தர்களைக்காத்த—சித்தம் வைத்துச்சேர்த்த
பரிமள சுகந்தலோலா—ரங்கநாதா
வரமருள் தந்து ஆளாய்

(25) நாகவணைமீது—யோகமாயெப்போதும்
ரம்பையர்களாட—கிம்புருடர்பாட
நாரதன்படிக்க—வேரிதாள் பிடிக்க
நாகரீக முற்றவனே—ரங்கநாதா
யோகநித்ரைபெற்றவனே

(26) பாருமிந்தவேளை—யாருமில்லைநாளை
பாசபந்தமெல்லாம்—தூசுபோலே செல்ல
பாருந்திருக்கண்ணால்—வாருமெந்தன் முன்னால்
பாண்டவர்கடூதனே—ரங்கநாதா
ஆண்டருளும்போதனே

(27) பரமதயாளா—அருள்புரிந்தாளாய்
பிறவிவினைபோக—மேவியே அன்பாக
பரமனேவாரும்—வரமதைத்தாரும்
பச்சைபீதாம்பரதாரா—ரங்கநாதா—எனக்
கச்சமில்லாமல்காராய்

(28) அன்னை தந்தை நீயே—பின்னையுன்டோ சேயேற்
காருதுணை சொல்லும்—வாரும் என் முன் நில்லும்
அனைத்துப்பரம் தீரும்—மனமகிழ்ச்சிதாரும்
அம்போருகக் கண்ணனே ரங்கநாதா
மும்போர் முகில் வண்ணனே

(29) உன்னை நம்பினேனே—பொன்னரங்கத்தோனே
ஓதல் தெறியாதா—பேதைசிறு போதாய்
உத்தது கண்டென்பால் சித்தம் வைத்துன்னன்பால்
ஓடியென்முன் வருவாய்—ரங்கநாதா
பாடினேனன்பாகவே

(30) ராப்பகலாக—செய்பவம் போக
நம்பினபோதே—துன்பம் வராதே
நனைவரும்பாதா—மனமிரங்காதா
நம்பினேனுந்தனையே—ரங்கநாதா
வந்துகாரெந்தனையே

(31) வண்டு கடிபோலே—கண்டு வுடல்மேலே
வருத்தமதாக—இருப்பது போக
வரந்தரும் சீதா—சிறந்த சமேதா
மாதவ வைகுந்தனே—ரங்கநாதா
ஸ்ரீதர கோவிந்தனே

(32) பத்துவிதவாய்வே—உற்றகைகளோய்வே
பத்தினதினாலே—இத்தரையின் மேலே
பஞ்சையைப்போல் நானே—அஞ்சிடவுமானேன்
பாதுகாத்தருளுமையா—ரங்கநாதா என்
வேதனை தீருமையா

(33) எத்தனையோகோடி—பக்தருன்னைநாடி
இத்தலத்தில் முத்தி—பெற்றாருன்னைப்பற்றி
யான்-ஏழையதுபோலே—நின் தாள்களை மென்மேலே
என்னேரமுந் துதித்தேன்—ரங்கநாதா என்
முன்னாலே வந்துதிப்பாய்

(34) முழந்தாளில் வாதம்—வளரந்து விரோதம்
முடக்கிடலாமா—-திடப்பரந்தாமா
முறைதனைக்கேளாய்—திருவின் மணாளா
மூதுலகுண்டவனே—-ரங்கநாதா
பூதனைக்கொன்றவனே

(35) உலகம் பதினாலும் அளந்தாயதில் மேலும்
உண்டுமிழ் செவ்வாயா—அண்டர்தொழும் தூயா
உன்னையன்றி வேறுதுணை—பின்னையுண்டோ காரும்
ஒப்பாருமில்லாதவா—ரங்கநாதா என் [எனை
அப்பாயென் முன்பாகவா

(36) ஸ்தலமதுபேரு—விளாங்குட்டையூரு
சங்கத்தின்கிட்டி—வெங்கட்ட ரெட்டி
தந்தை தவபுத்ரன்—பந்துஜனமித்ரன்
தத்துவத்தையொட்டி—முத்துராம ரெட்டி
தமிழ்ச்சிந்து பாடினேனே—ரங்கநாதா
அமுதுண்டு ஆடினேனே

(37) காதிலிந்த சிந்து—ஓதுமென்று வந்து
கருத்தில் நினைந்து—சிரத்தை மிகுந்து
கவனமாய்க் கேட்டும்—புவியில் பாராட்டும்
கற்றோர் படித்தோருடன்—ரங்கநாதா
மற்றோரும் வாழியவே

மற்றுப்பற் றேனக்கின்றி என்ற கொடுமுடித் தேவார மெட்டு.

(1) ராம ராமாவென்றுன்னையே நிதம் நாவினாற் சொல்லித்தியானி
பாமருடன் கூடிச் செய்திட்ட பாவங்களகன்றோடுமே [த்தால்
நாமகடுதி பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
வாமனாவெனை வந்து காத்தருள் மாதவா ரங்கநாதனே

(2) கொந்துலாவிய பைந்துழாயணி கோபிகான் முலைநந்த யான்
சிந்துலாவிய வெண்டிரைச்சிறு
செத்தைபோல் சுத்திச் சுத்தினேன்

நந்துலாவிய பொன்னி சூழ்க்கரை ரங்கமேவிய ரங்கனே,
வந்து காத்தரு ளிந்தவேளையில் மாதவா ரங்கநாதனே

(3) பாந்தளின் சிரமீது நர்த்தனம் பண்ணும் பங்கஜ பாதா யான்
மாந்தளிரொக்கும் மேனியாரல்குல் வாரி வீழ்ந்து மயங்கினேன்
நாந்தகம் திகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
பூந்துழாயணி மார்பாவுந்தனைப் போற்றினேனெனக்காருமே

(4) வாரணம் ஆதிமூலமென்றிட வந்துகாத்த முகுந்தயான்
தாரணி தன்னிலுன் திருநாமம் சாற்ரும்ணுப் பாவியாகினேன்
நாரணி புகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
காரணுயிந்த வேளை வந்தெனைக் காத்தருள் ரங்கநாதனே

(5) தாலமுந்தணல் வானமும் புகை சாற்ரும்ணுத் தாய்கடா மரை
மேலவன் கரம் ஏழையின் கழல் மேதியின் இளைப்பாறவே
நாலமுந்திகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
பாலகன் கரை யேறநின் கிருபை பாரையா ரங்கநாதனே

(6) தேவ தேவகி நந்தனுவுனைத் தேடிக் கீர்த்தனம் பாடியே
ஆவலாய் நிதம் போற்றி செய்திடா தன்பிலாப் பேயனுகினேன்
நாவலர் புகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
நீவராவிடில் யாரையா துணை நிர்த்தனே ரங்கநாதனே

(7) கர்மமாம் பாச பந்தத்தாழ்ந்துயான் கன்மனவஞ்சனுகியே
ஜென்மவாரியில் வீழ்ந்தயர்ந்து யான் தீயபாதகனுகினேன்
நன்மணி திரை பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
நின்மனது வந்தென்னை யாண்டருள் நிர்மலா ரங்கநாதனே

(8) நீ நிறம் புயல்வண்ணு யென்னுளம் நீ யென்ன வறியாததா
கார்நிறம்கொண்ட தென்திசைப்புழுக் காலன் வந்தணுகாமலே
நாநிலம் புகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
வானிறைந்த கழுலன் மீதினில் வந்தருள் ரங்கநாதனே

(9) சூதம்சேர் குயம் மங்கைக்காவலாய் தொந்தவாரிய மூழ்ந்தியான்
போதம் போய் மெச்சும் புந்திபோய் பொல்லா
பொய்யனென்று பேராகினேன்

நாதஞ்சூடிரை பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
பாததாமரை மீதிலங்கிய பாப்பனே ரங்கநாதனே

(10) வாமனவவதார மாகியே மாவலிக்கருள் நீடிய
தாமரைமலர் வந்துதித்தருள் தாக்கணங்கு சமேதனை
நான்மறை புகழ் பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
வாமனுவெனே வந்து காத்தருள் மாதவாரங்கநாதனே

(11) ஆரணன்வெள்ளை வாரணன்தொழு மச்சுதா நறும் பைந்துழாய்
தாரணுவனையான் மறந்து சண் டாளப்பாதகனுகினேன்
நாரணன் திரு பொன்னி சூழ்கரை ரங்கமேவிய ரங்கனே
காரணுமுத்து ராமையன் தனைக் காத்தருள் ரங்கநாதனே

திருப்பதி யாத்திரைச் சிந்து.

தெரிசிப்போம் வாரும்—ஸ்ரீவெங்கடேசனை
தெரிசிப்போம் வாரும்

தெரிசிப்போம் வாருங்கள்—பரிசுத்தமாகவே
வருஷிக்கும் ஸ்ரீ வெங்க—டேசரடியைக்கண்டு (தெரிசிப்)

திருப்பதியென்றாலே—திவ்ய மோக்ஷமுண்டு
தேவர் முனிவரெல்லாம்—குடியிருப்பதுமுண்டு
ஆவலாய்த் துதிப்பவர்க்—கதிக சம்பத்துண்டு
அன்புடன் தேவனைக்—கண்டால் கிருபையுண்டு
பார்க்கலாம் யாரும்—முன்செய்த பாவங்கள்
தீர்கலாம் வாரும்

சேர்ந்தார் சினேகிதத்தார்—சேர்ந்துமே வாருங்கள்
திவ்ய க்ஷேத்திரத்தைக்—கண்ணாலே பாருங்கள்
நாம் செய்த தீவினை—நன்றாகத் தீருங்கள்
நரகமென்ற சொல்லை—அகலவே தள்ளுங்கள்
நாமளெல்லோரும்—ஒன்றாகவே சேர்ந்து
நடக்கலாம் வாரும்

ஈரோட்டு ஸ்டேஷனில்—டிக்கட்டு வாங்குங்கள்
எல்லோரும் கூடியே—ரயிலினிலேறுங்கள்
ஆனந்தித்து பகவான்—அடியிணை பணியுங்கள்
அன்பாகத் திருப்பதி—ஸ்டேஷனிலிறங்குங்கள்
ஹரிகோவிந்த ராஜர்—பட்டணமதிசயம்
குறிப்பிட்டுப்பாரும்

மைசூர் மஹாராஜா—சத்திரந்தனைப்பாரும்—யாத்ரை
வருகும் ஜனங்கள்—வசிக்க சௌக்யம் பாரும்
தெருவிலே ஜனக்கும்பல்—அதிகம் திரியுது பார்
அதிலே சரிபாதி—தலைமொட்டை தனைப்பாரும்
கடைகள் சிங்காரம்—பார்க்கப்பார்க்கப் பெருமை
காணுதென்னேரம்

மஹந்து மஹாராஜா—மாடி மாளிகை பாரும்
மலைமேலிருந்துவரும்—கஜானுப்பணத்தைப் பாரும்
முன்னும் பின்னும் நாலு—ஜவான்கள் தனைப்பாரும்
ஐஞ்சால் குண்டு துப்பாக்கி—பந்தோபஸ்தைப்பாரும்
இவ்வித தனமே—ப்ரதிதினமும் பெருகி
வருகுது பணமே

கோவிந்த ராஜரைக்—கண்டு தொழுதுகொண்டோம்
கூடியதுவஜஸ்தம்பம்—வந்து பணிந்து நின்றோம்
எதிராக ஸ்ரீராமர்—சன்னிதி வழிகண்டோம்
எட்டிப்பார்க்கமலை—யேறும் வழியைக்கண்டோம்
பரதேசிக்கூட்டம்—காசுபணம் வாங்க
எடுக்குது ஓட்டம்

பாண்டவ தீர்த்தமும்—பாபஞசனம் பாரும்
பைந்துளப ராம—தீர்த்தமிதுவாங்தேரும்
ஆண்டருள் கொடுத்திடும்—ஆகாச கெங்கையும்
அற்புதமானதோர்—கிருஷ்ண தீர்த்தம் வாரும்
மருளும் சேஷ தீர்த்தம்—தேவாமிர்தம்
அருளும் பாபநாசம்

600 008.
121647

இப்படியனேகமும்—செப்புதற்கரிதான
எழிலான கிரிதனில்—வளமையுண்டறிகான
தப்படி தாசர்கள்—விற்பனமொடு ஆட்டம்
சாரங்கபாணியைக்—கைதொழுதிட நாட்டம்
நலமென்ன சொல்வேன்—கூட்டங்கூட்டமாக
ஜனமென்ன விள்வேன்

பஜனை பாடிடுங்கூட்டம்—பார்க்கப் பார்க்கத் தேட்டம்
பாரித்தெழுந்து மயிர்க்—கூச்செழும் பிரவாகம்
தசரத ராமனுக்—கபிஷேக நெய்பாகம்
சர்ஜன வேதிய—ரர்ச்சனை புரியாகம்
ஞாலங்கற்கண்டோ—இத்தலம் போலவே கலி
காலத்திலுண்டோ

பவானித் தலத்தின்—பனிரெண்டு மையிலிலே
பட்டலூர் மஜரா—விளாங்குட்டையூரிலே
ரெட்டி குலத்துதி—முத்துராமதாஸன்
நேசிக்கும் வேங்கடத்—திருப்பதி வழிநடை
சிந்தென்ற பண் வாழி—வாசிக்கக் கேட்டவர்
என்றென்றுமே வாழி

விளாங்குட்டையூரிலே—முத்துராமதாஸர்
விளம்பின சிந்திது—வேங்கடசர்வேசர்
களங்கமிலாதணி—பூஷணமெனநேசர்
களித்திடவே சொன்ன—அருட்பிரபந்த மூலர்
காசினிதான்வாழி—பனிரெண்டாழ்வார்
தேசுடனே வாழி

பஜனையில் பக்தி பரவசத்தால் பாடிய கீர்த்தனை.

பியாக்—ஆதிதாளம்.

(1) எப்பக் காண்பேனுன் எப்பக்காண்பேனுன்
அப்பன் வெங்கடேசனை நான்—எப்பக்காண்பேன்.

(2) எப்பக்காண்பேனான்—எப்பக்காண்பேனான்
ஒப்பாருமில்லாத—சர்ப்பசயனனை நான் (எப்பக்)

(3) நாலுமறைபுகழும்—ஏழுமலைநடுவில்
சீலமுடனே நிதம்—வாழும் வெங்கடேசனைநான் (எப்பக்)

(4) இச்செகத்தில் சோமுகனை—நிச்சயமாக வதைக்க
மச்சாவதாரமெடுத்த—அச்சுதவானந்தனை நான் (எப்பக்)

(5) நம்பும் ப்ரஹலாதனனை—சம்ப்ரமமுடனே காக்க
வம்பனிரண்யனைக்கொல்ல—ஸ்தம்பத்திலுதித்தவனை (எப்

(6) பாவி துஷ்டராவணனை—ஏவி ராமபாணத்தினால்
தாவியுயிரைக்கொன்ற—தசரததனயனை (எப்பக்)

(7) அண்டர்புகழும் மாயன்—எண்டிசைபணியும் நேயன்
தொண்டன் முத்துராமதாசன்—துதிக்கும் ஸ்ரீராமனை நான்
(எப்பக்)

பக்திரஸப் பாமாலை

முற்றிற்று.

ஆனந்தா பிரஸ், ஈரோடு.

சத்தியமே தெய்வமாகும்.

மகாத்மா காந்தி.

மில்லுகளில் மிஷின்களில் குத்தப்படும் நெல்லரிசியின் ஜீவசத்து கெட்டுப்போகிறது. அதைச் சாப்பிட்டால் நோயுண்டாக்குகிறது என்பது அநுபவம்.

வேம்பும் அரசும் வைத்துப் பயிர்செய்தல் ஒரு கோவில் கட்டுவதைவிட மேலானதுதான்.

நியாயத்தை அநுசரிப்பவன் மனிதனில் உயர்வு, தாழ்வு என்பதில்லாமல் நடந்துகொள்கிறான்.

ஆனந்தா பிரஸ்,

ஈரோடு.

அன்புடையீர்!

உங்களுடைய அச்சுவேலைகளை அழகாகவும்,
பைண்டு வேலைகளை உறுதியாகவும்
குறைந்த சார்ஜுக்கு
செய்துகொள்ள பிரியப்படுகிறீர்களா?

ஆம்! என்றால்;

நமது புதிய அச்சுக்கூடத்தில்
அழகான இங்லீஷ் எழுத்துகளும்,
நேர்த்தியான தமிழ் எழுத்துகளும்,
கண்ணைக்கவரும் பார்டர் தினுசுகளும்
வரவழைக்கப்பட்டிருப்பதால்
உடனே உங்களுடைய
எல்லாவித அச்சு & பைண்டு வேலைகளையும்
ஒருமுறை கொடுத்து பரீக்ஷித்துப்பாருங்கள்.

G. வீராசாமி ரவுத்து,
புரோப்ரைட்டர்.